

பாமாலை 257 - இயேசு கிறிஸ்துவே

1. இயேசு கிறிஸ்துவே
உலகத்திலே
கெட்டுப்போனவருக்கான
ஒளியும் உயிருமான
ரட்சகர் நீரே
இயேசு கிறிஸ்துவே.

2. என்னை மீட்க நீர்
ஜீவனை விட்டீர்
குற்றத்தை எல்லாம் குலைக்க,
என்னைத் தீமைக்கு மறைக்க
எனக்காக நீர்
ஜீவனை விட்டீர்.

3. எங்கள் மீட்புக்கு
லோகத் தோற்றத்து
நாளின் முன்னே வார்த்தை தந்தீர்;
காலமாகையில் பிறந்தீர்
பாவிகளுக்கு
மீட்புண்டாயிற்று.

4. வெற்றி வேந்தரே,
பாவம் சாபம் பேய்
நரகத்தையும் ஜெயித்தீர்;
நாங்கள் வாழ நீர் மரித்தீர்;
உம்மால் துஷ்டப் பேய்
வெல்லப்பட்டதே.

5. மா இராஜாவே,
பணிவுடனே
தேவரீருக்குக் கீழ்ப்பட்டு,
உமது மொழியைக் கற்று,
அதை நெஞ்சிலே
வைப்பேன், இயேசுவே.